

# தி.மு.க. இளைஞர் அணி

## இந்தித் திணிப்பு – நிதிப் பகிர்வில் பாரபட்சம் – தொகுதி மறுசீரமைப்பில் அநீதி

## ஒன்றிய அரசைக் கண்டித்து தொகுதிதோறும் பொதுக்கூட்டம்!

## கழக இளைஞர் அணிச் செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அறிவிப்பு

கழக இளைஞர் அணியின் மாவட்ட – மாநகர – மாநில அமைப்பாளர், துணை அமைப்பாளர்கள் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தின் அடிப்படையில், புதிய கல்விக்கொள்கை மூலம் இந்தியைத் திணிக்கும், நிதிநிலை அறிக்கையில், தமிழ்நாடு என்ற பெயரை முற்றிலுமாக புறக்கணித்து, நிதிப் பகிர்விலும் பாரபட்சம் காட்டும், தொகுதி மறுசீரமைப்பில் தமிழ்நாட்டை வஞ்சித்து, அநீதி இழைக்கும், ஒன்றிய அரசைக் கண்டிக்கும் வகையில், சட்டமன்றத் தொகுதிதோறும் கண்டனப் பொதுக்கூட்டம் நடைபெறுகிறது.

இக்கூட்டத்தில் முதன்மைப் பேச்சாளர் ஒருவர், இளம் பேச்சாளர் ஒருவர் என தொகுதிக்கு இரண்டு பேர் பேசவுள்ளனர். மாநில உரிமைகளுக்கு எதிராகச் செயல்படும் ஒன்றிய அரசைக் கண்டித்தும், 72–வது பிறந்தநாள் காணும் மாண்புமிகு கழகத் தலைவர் அவர்களின் திராவிட மாடல் ஆட்சியின் சாதனைகள் குறித்தும், எளிய மக்களுக்குப் புரியும் வகையில், விளக்கிப் பேசுவார்கள்.

மக்களுக்கு விழிப்பு உணர்வூட்டும் வகையில், அன்பகத்தில் தயாரிக்கப்பட்டுள்ள துண்டறிக்கையை, தொகுதி மக்களுக்கு வீடு வீடாகச் சென்று விநியோகித்து, அவர்களை இக்கூட்டத்தில் பங்கேற்க செய்யுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

தமிழ் மக்களின் உரிமைக்குக் குரல் எழுப்பிடும் வகையிலும், உரிமையைத் தர மறுக்கும் ஒன்றிய அரசைக் கண்டிக்கும் வகையிலும், இந்தப் பொதுக்கூட்டங்களை எழுச்சியுடன் நடத்துமாறு, இளைஞர் அணி நிர்வாகிகள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

| வ. எண் | நாள் | கழக மாவட்டம் | சட்டமன்றத் தொகுதி | இடம் | பேச்சாளர்கள் |
|---|---|---|---|---|---|
| 1 | 17.03.2025 | விருதுநகர் தெற்கு | சாத்தூர் | தேவர் சிலை அருகில், வெம்பக்கோட்டை | இந்திரகுமார் தேரடி, தனிமரக்காடு சம்பத்குமார் |
| 2 | 17.03.2025 | ஈரோடு தெற்கு | ஈரோடு கிழக்கு | கே.என்.கே.ரோடு | வழக்கறிஞர் தமிழன்பிரசன்னா, செ.தமிழரசன் |
| 3 | 17.03.2025 | சென்னை தெற்கு | மதுரவாயல் | நாயுடு தெரு, ராமாபுரம் | **மாண்புமிகு கோவி.செழியன்,** க.சுபத்ரா |
| 4 | 17.03.2025 | சென்னை வடகிழக்கு | மாதவரம் | மோரை, அண்ணாநகர் | வழக்கறிஞர் ராஜீவ்காந்தி, செ.ஜோதி |
| 5 | 17.03.2025 | கோவை வடக்கு | கவுண்டம்பாளையம் | பேருந்து நிலையம் அருகில், நரசிம்மநாயக்கன்பாளையம் | **நாஞ்சில் சம்பத்,** ஆட்லின் |
| 6 | 18.03.2025 | கோவை வடக்கு | தொண்டாமுத்தூர் | சுண்டக்காமுத்தூர், சுகனாபுரம் பகுதி, கோவை | வழக்கறிஞர் தமிழன்பிரசன்னா, இம்ரான் கான் |
| 7 | 18.03.2025 | கோவை மாநகர் | சிங்காநல்லூர் | சௌரிப்பாளையம், பீளமேடு | வழக்கறிஞர் ராஜீவ்காந்தி, தக்ஷிதா |
| 8 | 19.03.2025 | மதுரை வடக்கு | மதுரை கிழக்கு | பேருந்து நிலையம் அருகில், ஆனையூர் | **திண்டுக்கல் லியோனி,** சி.ராஜபாரதி |
| 9 | 19.03.2025 | ஈரோடு மத்திய | பெருந்துறை | காஞ்சிக்கோயில் | இந்திரகுமார் தேரடி, ரா.அபிநயா |
| 10 | 19.03.2025 | விழுப்புரம் வடக்கு | திண்டிவனம் | கூனிமேடு | வழக்கறிஞர் தமிழன்பிரசன்னா, ச.ஷாநவாஸ் |
| 11 | 20.03.2025 | மதுரை வடக்கு | சோழவந்தான் | சந்தை அருகில், வாடிப்பட்டி | **நாஞ்சில் சம்பத்,** அ.செசிலின் சந்தியா தீப்தி |
| 12 | 20.03.2025 | விழுப்புரம் வடக்கு | செஞ்சி | அப்பம்பட்டு | **பொன்.முத்துராமலிங்கம்,** குடிஅரசு |

**அன்பகம்,** சென்னை – 18.
நாள் : 16–03–2025.

**உதயநிதி ஸ்டாலின்**
செயலாளர், தி.மு.க. இளைஞர் அணி



தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று (15.3.2025) சென்னை உயர்நீதிமன்ற வளாகத்தில் நடைபெற்ற இந்திய அரசியலமைப்பு ஏற்றுக் கொள்ளப்பட்ட 75வது ஆண்டு விழா மற்றும் சென்னை வழக்கறிஞர்கள் சங்கத்தின் 160வது ஆண்டு விழாவில், சென்னை வழக்கறிஞர்கள் சங்கத்தின் சிறப்பு மலரினை வெளியிட்டார். இவ்விழாவில், மாண்பமை உச்சநீதிமன்ற நீதிபதிகள் நீதியரசர் எம்.எம். சுந்தரேஷ், நீதியரசர் கே.வி. விஸ்வநாதன், ஆர். மகாதேவன், மாண்பமை சென்னை உயர்நீதிமன்ற தலைமை நீதிபதி நீதியரசர் கே.ஆர். ஸ்ரீராம், அமைச்சர்கள் எஸ். ரகுபதி, பி.கே. சேகர்பாபு, அரசு தலைமை வழக்கறிஞர் பி.எஸ். ராமன், நாடாளுமன்ற உறுப்பினர்கள் என்.ஆர்.இளங்கோ, பி. வில்சன், ஆர். கிரிராஜன், இந்திய கூடுதல் சொலிசிடர் ஜென்ரல் ஏஆர்எல். சுந்தரேசன், இந்திய முன்னாள் அட்டர்னி ஜென்ரல் கே. பராசரன், சென்னை வழக்கறிஞர்கள் சங்கத்தின் தலைவர் எம். பாஸ்கர், செயலாளர் எஸ். திருவேங்கடம், மாண்பமை நீதியரசர்கள், மூத்த வழக்கறிஞர் ராஜய்யா உள்ளிட்ட வழக்கறிஞர்கள், சென்னை வழக்கறிஞர்கள் சங்கத்தின் நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

### அமைச்சர் அர.சக்கரபாணி தலைமையில்

## நுகர்வோர் விழிப்புணர்வு மாரத்தான் ஓட்டம்!

### அமைச்சர் பி.கே.சேகர்பாபு துவக்கி வைத்தார்! 1500–க்கும் மேற்பட்ட மாணவர்கள் பங்கேற்பு!

சென்னை, மார்ச் 17 -

சென்னையில் நுகர்வோர் பாதுகாப்பு விழிப்புணர்வு குறித்து மராத்தான் ஓட்டம் நடைபெற்றது.

தேசிய நுகர்வோர் நாள் மற்றும் உலக நுகர்வோர் உரிமை நாளினைக் கொண்டாடிடும் பொருட்டு, மாநில மற்றும் மாவட்ட அளவிலான நுகர்வோர் விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் கல்வி நிறுவனங்களில் செயல்படும் குடிமக்கள் நுகர்வோர் மன்றங்கள் மூலமாக தமிழ்நாடு அரசின் உணவுப் பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு துறையின் சார்பாக நடத்தப்பட்டு வருகின்றன.

அதன் ஒரு பகுதியாக, நுகர்வோர் பாதுகாப்பு மற்றும் விழிப்புணர்வு குறித்த மராத்தான் ஓட்டம் நேற்று (15.03.2025) சென்னை தீவுத்திடலில் நடைபெற்றது. இம்மராத்தான் ஓட்டத்தில் 1500க்கும் மேற்பட்ட பள்ளி/கல்லூரி, மாணவ/மாணவியர்கள் பங்கேற்றனர்.

உணவு மற்றும் உணவுப் பொருள் வழங்கல் துறை அமைச்சர் அர.சக்கரபாணி தலைமையில் நடைபெற்ற இம்மராத்தான் போட்டியினை, இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு சென்னை தீவுத்திடலிலிருந்து கொடியசைத்து துவக்கி வைத்தார்.

ஐந்து கிலோ மீட்டர் தூரம் கொண்ட இம்மராத்தான் போட்டி தீவுத்திடலில் ஆரம்பித்து அண்ணா சாலை, சிவானந்தா சாலை வழியாகச் சென்று திரும்பவும் தீவுத்திடலுக்கு வந்து நிறைவு பெற்றது.

இம்மராத்தான் ஓட்டத்தில் பங்கேற்று வெற்றி பெற்ற மாணவ/மாணவியருக்கு கேடயம் மற்றும் சான்றிதழ்கள் உணவு மற்றும் உணவுப் பொருள் வழங்கல் துறை அமைச்சர், இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் அவர்களால் வழங்கப்பட்டன.

கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை முதன்மைச் செயலாளர் சத்ய பிரதா சாகு, மற்றும் உணவுப் பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை இயக்குநர் த.மோகன் மற்றும் உயர் அலுவலர்கள் இந்நிகழ்வில் கலந்து கொண்டனர்.

### இறுதி ஆண்டு முடித்து – நிலுவைப் பாடங்கள் வைத்துள்ள

## பாலிடெக்னிக் கல்லூரி மாணவர்களுக்குத் தேர்வு எழுத சிறப்பு வாய்ப்பு!

### அமைச்சர் முனைவர் கோவி.செழியன் தகவல்!

சென்னை, மார்ச் 17 -

பாலிடெக்னிக் கல்லூரி மாணவர்கள் இறுதி ஆண்டு முடித்தும் பல்வேறு காரணங்களால் சில பாடங்களில் தேர்ச்சி அடையாமல் தங்களின் வாழ்வில் அடுத்த நிலைக்கு செல்ல இயலாத சூழ்நிலையினை கருத்தில் கொண்டு அவர்களும் வாழ்வில் முன்னேற்றம் பெற தேர்வு எழுத சிறப்பு வாய்ப்பு உள்ளது என உயர்கல்வித் துறை அமைச்சர் முனைவர் கோவி. செழியன் கூறினார்.

பாலிடெக்னிக் கல்லூரி இறுதி ஆண்டு முடித்து நிலுவைப் பாடங்கள் (Arrears) வைத்துள்ள மாணவர்கள் எதிர்வரும் ஏப்ரல் 2025 மற்றும் அக்டோபர் 2025 பருவ தேர்வுகளின் போது, தேர்வு எழுத சிறப்பு வாய்ப்பு (Grace Chance) வழங்கப்படுவதாக உயர்கல்வித் துறை அமைச்சர் முனைவர் கோவி. செழியன் தெரிவித்துள்ளார்.

இது குறித்து உயர்கல்வித் துறை அமைச்சர் தெரிவித்துள்ளதாவது:

முதலமைச்சர் அவர்களின் தலைமையிலான திராவிட மாடல் அரசு, தமிழ்நாட்டு மக்களின் பொருளாதார தேவையை அறிந்து அரசின் அனைத்து துறைகளின் சார்பாக பல்வேறு நலத்திட்ட உதவிகளை வழங்கி வருகிறது.

தமிழ்நாட்டின் மாணவச் செல்வங்களின் எதிர்கால நலன் கருதி, மாணவர்களின் மீது தனி அக்கறை கொண்டு உயர்கல்வித் துறையில் பல்வேறு நல திட்டங்களை அறிமுகப்படுத்தி மாணவர்களின் கல்வி தரத்தை செம்மைப்படுத்தி வருகிறது. ஏழை, எளிய மாணவர்கள் கல்வி பயின்று, தகுந்த வேலை வாய்ப்பினைப் பெற வேண்டும் என்ற உயரிய நோக்கத்துடன் நான் முதல்வன் திட்டத்தின் மூலம் தொழிற்சாற் கல்வியினை வழங்கி வருகிறது.

பாலிடெக்னிக் கல்லூரி பயின்று பல்வேறு குடும்பச் சூழ்நிலைகளால் தேர்ச்சி பெறாமல் நிலுவை வைத்துள்ள பாடங்களுக்கு (Arrears) தேர்வு எழுத சிறப்பு வாய்ப்பு வழங்கும்படி மாணவர்களிடமிருந்து வரப்பெற்ற கோரிக்கைகளை தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் கனிவுடன் பரிசீலித்து உத்தரவிட்டதின் படி, பாலிடெக்னிக் கல்லூரி மாணவர்கள் இறுதி ஆண்டு முடித்தும் பல்வேறு காரணங்களால் சில பாடங்களில் தேர்ச்சி அடையாமல் தங்களின் வாழ்வில் அடுத்த நிலைக்கு செல்ல இயலாத சூழ்நிலையினை கருத்தில் கொண்டு அவர்களும் வாழ்வில் முன்னேற்றம் பெற ஏதுவாக அரசு எதிர்வரும் ஏப்ரல் 2025 மற்றும் அக்டோபர் 2025 பருவத் தேர்வுகளின் போது, நிலுவைப் பாடங்கள் (Arrears) தேர்வு எழுத சிறப்பு வாய்ப்பு (Grace Chance) வழங்க முடிவெடுத்துள்ளது.

இது குறித்த விவரங்களை https://dte.tn.gov.in என்ற இணையதளம் வாயிலாக மாணவர்கள் அறிந்து கொள்ளலாம். இச்சிறப்பு வாய்ப்பினை சில பாடங்களில் தேர்ச்சி பெறாத பாலிடெக்னிக் மாணவர்கள் பயன்படுத்தி தங்கள் எதிர்காலத்தை வளமாக்கி கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு, உயர்கல்வித் துறை அமைச்சர் தெரிவித்துள்ளார்.